# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

ஸ்ரீவிஷ்விணுவின் பத்து அவதாரங்களில் ராமாவதாரம் தான் பூமியில் அதிககாலம் தங்கிய அவதாரம். பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இந்த மண்ணுலகில் வாழ்ந்த ஸ்ரீராமன் பல வகையிலும் ஒரு முன் மாதிரி மனிதனாக வாழ்ந்துவிட்டுப் போனான். ஒரு நல்ல கணவனாக, பணிவுள்ள தனயனாக, பாசமுள்ள அண்ணனாக, தீய பழக்கங்களில்லாத குடிமகனாக, அடக்கமுள்ள மாணவனாக, தாய்மனம் குளிர்விக்கும் உத்தம புத்திரனாக...... இப்படிப் பல கோணங்களில் தன் சான்றாண்மையை அவன் நிரூபித்தான். அவற்றில் ஒரு சிறந்த பண்பாக அவன் ஆட்சி புரிந்த அழகைச் சொல்லலாம்.

கடமை தவறாத மன்னனாக வாழ்ந்த அவன் செங்கோல் அரசனென்று பெயர் பெற்றான். ஒரு சிறந்த ஆட்சி முறையை "ராமராஜ்யம்" என்று பிற்கால மக்கள் குறிப்பிட்டுப் பாராட்டுகிற அளவு அவன் ஆட்சி சிறப்பாக இருந்தது. இன்று நம் நாட்டில் ஒரு நல்ல ஆட்சிமுறை அமைய வேண்டும் என்று நாம் அனைவரும் ஆசைப்படுகின்றோம். ஒழுக்கக் கேட்டினால் நலிந்து போன முடியாட்சி முறை ஒழிக்கப்பட்ட பிறகு நம் துன்பத்தின் விடிவு காலமாக ஜனநாயத்தைக் கொண்டு வந்து நம்மை நாமே ஆளும் போது அது ஒரு ராமராஜ்யமாக இருக்கும் என்று கனவு கண்டோம். ஆனால் பிள்ளையார் பிடித்தது குரங்காய் முடிந்தது.

கொடுமைகள் தொடர்கின்றன. ஊழல்கள், நடுவு நிலைமையின்மை, நலிவடைந்த நாட்டு மக்களின் எதிர்காலம் என்று பல பிரச்னைகள் நம்மைச் சூழ்ந்து வாட்டுகின்றன. இவற்றுக்கு முடிவு எப்போது? அல்லது எப்படி? என்று தெரியாமல் திகைக்கிறோம். பிரச்சினைகளுக்கு மூல காரணம் எது என்று கண்டுபிடிக்க முடியாமல் விழிக்கிறோம். இந்தத் திகைப்பை வால்மீகி ராமாயணம் போக்கி நமக்கு உதவும். தனக்குப் பின் அடுத்த ஆட்சியாளனாக ஸ்ரீராமனை சிம்மாசனத்தில் அமர்த்தலாமா என்று மன்னன் தசரதன் மக்கள் அவையில் கலந்தாலோசனை செய்கிறான். அப்போது அந்த அவையில் யார் யார் இருந்ததாக வால்மீகி கூறுகிறார் என்று கவனித்துப் பாருங்கள். நாடெங்கிலும் இருந்து திரண்டு குழுமி இருந்த அறிவிற் பெரிய மக்கள் பிரதிநிதிகளும் கல்வி, ஞானம், ஒழுக்கம், பொறுப்புணர்வு, இவை உள்ள தலைவர்களும், மந்திரிகளும்தான் அங்கே இருந்தார்கள் என்று வால்மீகி கூறுகிறார். ஏனென்றால் ஒரு ஆட்சியாளனைத் தேர்ந்தெடுப்பது என்பது மிக ஆபத்தான காரியம். நம் தேர்வில் சிறிது நிதானம் தவறினாலும் நாட்டின் தலைவிதியே மாறிவிடும். எனவே தான் அறிவு, அனுபவம், கடமை உணர்வு, ஆகியவற்றில் பெரிய சான்றோரைக் கேட்டு தசரதன் முடிவு செய்தான். அவன் வீதி வீதியாய்ச் சென்று சேரி சேரியாய் அலைந்து மக்களின் கருத்தை கேட்கவில்லை. அதனால் தான் நல்ல ஆட்சியாளன் அமைந்தான். சிறந்த ஆட்சிமுறை அமலுக்கு வந்தது. மக்கள் செழிப்பாய் மகிழ்வுடன் வாழ்ந்தார்கள். நீதி நிலைத்தது. தருமம் வளர்ந்தது.

இன்று நடப்பதென்ன? ஒரு நாட்டின் தலைவனை ஆட்சியாளனை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள்? ஜனநாயகம் என்ற பெயரில் அறிவு சூன்யங்களும், அனுபவம் அற்ற அரை வேக்காடுகளும், நாட்டைப் பற்றி ஒன்றுமே தெரியாத நாட்டுக் கட்டைகளும், ஓட்டுக்கள் போடும்படிக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவர்கள் தான் இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறார்கள். இவர்களில் சிலர் சினிமாவில் ஸ்டைல் காட்டுகிறான் என்பதற்காக ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சிலர் திரைக்கதையில் ஒருவன் நல்லவனாகத் தோன்றுகிறான் என்பதற்காக நடிப்புக்கும் நிஜத்துக்கும் பேதம் தெரியாமல், நாடாளுபவன் இன்னான் என்று முடிவு பண்ணுகிறார்கள். சிலர்

பணத்துக்கு விலை போகிறார்கள். சிலர் ஜாதி அடிப்படையில் வாக்களிக்கிறார்கள். நாட்டின் நன்மையைச் சிந்தித்து ஓட்டுப் போடுகிறவர்கள் மிக மிக குறைவு.

ஸ்ரீராமன் ஆட்சி புரிந்தபோது பொதுமக்களின் உணர்வுகளை மதிக்காமல் தான் ஆட்சி புரிந்தானா? பாமரர், படிக்காதவர், ஏழைகள், கீழ்த் தட்டு மக்கள் ஆகியோருக்கு அவன் நன்மை செய்யவில்லையா? அவர்களுடைய சுக துக்கங்களில் அவன் பங்கு கொள்ளவில்லையா? அவர்களை அவன் புறக்கணித்திருந்தால் அவன் காட்டுக்கு துரத்தப் பட்டபோது நாடு முழுவதும் அவனை தேடிக் கொண்டு காட்டுக்கு ஓடியிருக்குமோ? இங்கே நாம் பொறுமையாகச் சிந்திக்க வேண்டும்! முடிசூடிய மன்னனாக ராமன் அரசாட்சி நடத்திய போதும் ஜனங்களுக்கு நாயகனான ஜனநாயகனாகத் தான் வாழ்ந்தான். ஆனால் ஒரே ஒரு தவறை மட்டும் அவன் செய்யவில்லை. யாரைக் கேட்டு எதைச் செய்ய வேண்டும் என்ற விவஸ்தையில்லாமல் எல்லோரிடமும் அவன் ஆட்சி முறைக்கு ஆலோசனை கேட்டுக் கொண்டிருக்கவில்லை. எந்தெந்தக் காரியத்திற்கு யார் யாருடைய ஆலோசனை தேவை, யார் யாருடைய அறிவுரை தேவையில்லை என்பது அவனுக்குத் தெரியும். அதனால்தான் அவன் சிறந்த மன்னனாய்த் திகழ்ந்தான்.

சினிமாவுக்குச் சிறப்பாக வசனம் எழுதுகிறவர்களுக்கும், மேடையில் அலங்கார வார்த்தைகளை அடுக்கி வீசுகிறவர்களுக்கும், மயங்கி ஓட்டுப் போடும், எதிர்காலச் சிந்தையற்ற பக்குவமில்லாத பாமரர்களைப் போன்ற மக்களை அவன் ஒருநாளும் ஆலோசனை கேட்டதில்லை. நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்க அவர்கள் உதவியை அவன் நாடி இருந்தால் அவன் ஆட்சி என்றோ புஸ்வாணமாகியிருக்கும்.

இன்று நாம் நடத்தும் தேர்தல் என்பது மிக முக்கியமான, ஒரு ஜீவ நாடகம். இந்த நாட்டின் ஒவ்வொரு உயிருடைய எதிர் காலத்தையும் முடிவு செய்யக் கூடிய ஒரு பரீட்சை. வாக்குரிமை என்பது மனித சமுதாயத்தின் ஜீவ மரண போராட்டத்தின் முடிவை அறுதியிடும் ஒரு ஆயுதம். அதன் கனத்தை நாம் உணர வேண்டும். பிறர்க்கும் உணர்த்த வேண்டும். முதலில் கல்வி அறிவில்லாத பாமரர்களுக்கு வாக்குரிமை தடைசெய்யப்பட வேண்டும். ஒரு நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடிய அறிவு மற்றும் மனமுதிர்ச்சி அடைய குறைந்தது எவ்வளவு படிப்பாவது இருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்து அந்த அளவு அடிப்படைக் கல்வி, வாக்குரிமைக்கு முதல் தகுதியாக்கப்பட வேண்டும். பாலுறுப்புக்கள் முழு வளர்ச்சி அடையும் 18 வயது தான் நாட்டின் விதியை தீர்மானிக்கும் வாக்குரிமை வயது என்ற அறியாமை நீங்க வேண்டும். 25 வயது கூட நிரம்பாத ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி என்ன தெரியும்? தோல் கவர்ச்சிக்கும், பால் மயக்கத்திற்கும், பணப் பகட்டிற்கும், பாட்டுக்களின் மெட்டுக்கும் கிறங்கிப் போய் பலியாகும் வயது அது! தேசத்தின் விதியை எழுதும் பேனாவை அந்த வயதில் நாம் அவர்கள் கையில் கொடுக்கக் கூடாது.

ஓட்டுரிமையைப் பணத்துக்கு விற்பது தவறு என்பது பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். இதற்கு எதிராக பிரபலப் பிரச்சாரங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். மேலும் சட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

இதையெல்லாம் அரசாங்கம் நமக்காகச் செய்யும் என்று நாம் எதிர்ப்பார்க்கக் கூடாது. ஏனென்றால் இந்தத் தவறான வழிகளைக் கடைப்பிடித்து ருசி கண்டவர்கள். அதைச் செய்யமாட்டார்கள். தம் காலை தாமே வாரிவிட்டுக் கொள்வார்களா? பொதுமக்கள் தான் பொறுப்பு உணர்ந்து நமக்குள் இந்த அறிவுப் பிரச்சாரத்தை நிகழ்த்தி பொறுப்புணர்வை வளர்த்து அடுத்த தலைமுறையிலாவது இப்படி சட்டங்கள் ஏற்பட காரணமாக இருக்க வேண்டும். இந்திய விடுதலைப் போராட்டம் இப்படித் தான் நடந்து வெற்றியில் முடிந்தது. ஸ்ரீராமானுஜர் வைணவம் என்ற வித்தை இப்படித்தான் நட்டு வளர்த்தார். அவர் அரசர்களின் உதவியை எதிர்ப்பார்க்கவில்லை. பதவிகளின் ஆதரவை நம்பவில்லை. ஆனால் அவரைப் போல் சமூக வெற்றி அடைந்தவர் யார் இருக்க முடியும்?

வேதங்களை இந்த உலகுக்கு அளித்து வைதிகம் என்ற தெய்வ மதத்தை மண்ணுலக அமிர்தமாக மாந்தருக்குப் பருகக் கொடுத்த இந்த மஹாபாரத தேசம் நலிவடையாமல், அழிவடையாமல், வேத நம்பிக்கையிலும் விஷ்ணு பக்தியிலும் சிறந்தோங்க வேண்டுமானால் நம் ஜனநாயக முறையை நாம் செப்பனிட வேண்டும். இல்லையென்றால் நாத்திகமும் அவைதிகமும் தான் அங்கிங்கெனாதபடி எங்கும் கூத்தாடும்.